பலூன் வியாபாரி சம்பந்தப்பட்ட வழக்கு

# போலீஸ் விசாரணை முடியட்டும்

டத்தோ பண்டார் தகவல்





கோலாலம்பூர், ஏப். 10-

கடந்த மார்ச் 28ஆம் தேதி ஜாலான் துங்கு அப்துல் ரஹ்மானில் பலூன் வியாபாரியிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதாகக் கூறப்படும் தனது மூன்று அமலாக்கத்துறை அதிகாரிகளுக்கு எதிரான விசாரணை நடத்தும் பொறுப்பை போலீசிடமே கோலாலம்பூர் மாநகர் மன்றம் விட்டு விடுகிறது. இந்த வழக்கு பற்றிய புலனாய்வு இறுதிக்கட்டத்தில் உள்ளதாக தமக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டது என்று கோலாலம் பூர் டத்தோ பண்டார் மைமுனா முகமட் ஷரிப் தெரிவித்தார்.

இது போலீஸ் வழக்கு ஆகும். விசாரணை முடியும் வரையில் நான் எந்த அறிக்கையையும் வெளியிட விரும்ப வில்லை என்று அவர் மேலும் சொன்னார். விசாரணை நடத்தும் முழுப்பொறுப்பை நாங்கள் போலீசிடமே விட்டுவிடுகிறோம் என்றும் அவர் சொன்னார்.

தலைநகரில் உள்ள துங்கு அப்துல் ரஹ்மான் நிர்வாகத் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு செல்லக்கூடிய தாமான் மெலாத்தி, எல்ஆர்டி நிலையத்தில் கூரை வசதி கொண்ட நடைபாதையை நேற்று திறந்து வைத்தபின் அவர் நிருபர்களிடம் பேசினார். பலூன் வியாபாரியும் கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத்துறை அதிகாரிகள் மூவரும் சம்பந்தப்பட்ட சம்பவம் பற்றிய 3 புலன் விசாரணை அறிக்கைகள் மேல் நடவடிக்கைக்காக டிபிபி தரப்பிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தின்போது எனக்கு முதுகெலும்பில் காயம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் உடல் செயலிழப்பு அபாயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது தொடர்பில் டிபி கேஎல் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என பலூன் வியாபாரி முகமட் ஸைமுடின் அஸ்லான் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தார்.